ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கவிஞர் நா முத்துக்குமாரின் படைப்புகள்

**இல. மகாலட்சுமி[1] & முனைவர் சிவ. முருகேசன்[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**[2] நெறியாளர்,**

**உ. நா. அரசினர்கல்லூரி, திருவள்ளூர் மாவட்டம்.**

**ஆய்வுப் பொருள்:**

“கவிஞர் நா.முத்துக்குமார் படைப்புகள்” என்னும் பொருளில் ஆய்வு அமைகிறது.

**ஆய்வு நோக்கம்:**

ஆதி மனிதன் வெற்றி, துயரம், கொண்டாட்டம் என அனைத்து நிலைகளிலும் ஆடிப்பாடி மகிழ்வார்கள். மனிதனின் இடைவிடாத பணிகளுக்கு இடையே இதயத்திற்கு புத்துணர்ச்சி தரக்கூடியதாகவும், வாழ்வியல் கூறுகளை எடுத்துரைக்கும் களமாகவும், நாகரீகத்தின் பிறப்பிடமாகவும் விளங்குவதில் திரைப்படத்துறைக்கு பெரும் பங்கு உண்டு என்றால் அது மிகையே அல்ல.

மக்களின் ஒவ்வொரு நிலையிலும் நம் வாழ்வோடும், பண்பாட்டோடும், பழக்கவழக்கங்களோடும் ஒன்றிணைந்து இருப்பது திரைப்பட பாடல்கள் ஆகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த திரைப்படப் பாடல்களை பல்வேறு பாடல் ஆசிரியர்கள் இயற்றி இருந்தாலும் , மனித உணர்வுகளை உற்சாகப்படுத்தி அனுபவத்தில் உருவான நற்கருத்துக்களை, நா.முத்துக்குமார் அவர்களின் கவிதைகளின் வழி கவிஞரை மதித்து ,பெருமைபடுத்தி சமூகத்திற்கு அவர் கூறும் கருத்துக்களை அறிய முற்பட்டு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை:**

உலகிற்கு மனிதத் தன்மையை உணர வைப்பது இலக்கியம். சமுதாயத்தின் கலைகள், ஒழுங்கு முறை , நாகரிகம், பண்பாடு, அரசியல், சமய நிலை முதலிய கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்பது இலக்கியமாகும். மக்களின் உணர்வுக்கு மகிழ்ச்சி அளிப்பது கலை. எனவே தான் இலக்கியத்தை ‘காலம் காட்டும் கண்ணாடி’ என்பர் அறிஞர்கள். இதன் அடிப்படையில் இலக்கிய படைப்புகள், உரைநடை கட்டுரைநூல்கள் என திரைப்படத்துறையில் அனைவருக்கும் நன்கு அறிமுகமான கவிஞர் நா. முத்துக்குமார் அவர்களின் படைப்புகளிலும், திரைப்படப் பாடல்களிலும் உள்ள அவரது கருத்துக்களை ஆராய்ந்து வருங்கால தலைமுறையினருக்கு அறியச்

செய்து, சிறந்த சமுதாயத்தை உருவாக்குவது, இந்த ஆய்வின் பொருளாக கொண்டு இந்த ஆய்வேடு அமைந்துள்ளது.

**கவிஞர் நா. முத்துக்குமாரின் பிறப்பு:**

*"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு*
*என்ஆற்றும் கொல்லோ உலகு "1*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க ,

தமிழகத்தின் பட்டு நகரமாக திகழும் காஞ்சிபுரத்தின் ஒரு சிறு கிராமமான கன்னிகாபுரத்தில்,1975 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பன்னிரெண்டாம் நாள் ஏ. நாகராஜன் என்பவருக்கும்,நா. சிவலட்சுமிக்கும் நன்மகனாக பிறந்தவர் கவிஞர் நா.முத்துக்குமார். இவர் சென்னை எழும்பூர் அரசு மருத்துவமனையில் பிறந்த பொழுது, அருகில் இருந்த எல்ஐசி கட்டிடம் தீப்பிடித்து எறிந்தது. அச்சமயத்தில் அவரது தந்தை அத்தீயின் முன்பு இவரை தூக்கிச் சென்று இன்று உலகின் இரண்டாவது அறிவாளி பிறந்தான் என பெருமிதம் அடைந்ததாக 'ஆனந்த யாழ்' என்ற நூலில் கவிஞரின் தம்பி ரமேஷ் குறிப்பிடப்பட்டுள்ளார்.

**கவிஞர் நா முத்துக்குமாரின் அம்மா**

இயற்கையின் நியதிப்படி, அனைத்து உயிரினங்களுக்கும் அன்னையின் மீது அளவுகடந்த அதிக அன்பு கொள்வது இயல்பான நிகழ்வாகும். இதற்கு கவிஞர் நா. முத்துக்குமார் அவர்களும் விதிவிலக்கு அல்ல. முத்துக்குமாரின் தாய் சிவலட்சுமிஅம்மையார் தன் மகனுக்கு கருவில் இருந்த போதே கதை கூறி வளர்த்ததால், முத்துக்குமாருக்கு கதைகள் என்றால் ரொம்ப பிடிக்கும். கர்ப்ப கிரகத்தில் ஒருகழித்து சுருண்ட படி, மொழிகள் ஏதுமற்ற அந்த அமானுஷ்ய இருட்டில் கதகதப்பில் தொப்புள் கொடி வழியாக தன் தாய்க்குரிய கதைகள் கருவில் இருக்கும் முத்துக்குமாருக்குள் விரியும் என, 'வேடிக்கை பார்ப்பவன்' என்ற நூலில் அழகாக கூறியுள்ளதை நாம் உணர முடிகிறது.

முத்துவின் தாயாருக்கு பெண் பிள்ளைகள் என்றால் பிரியம் அதிகம். தன் மகனை பெண் குழந்தையாகவே பாவித்து, தலை சீவி சிவப்பு கலர் ரிப்பன் கட்டி பூச்சூடி அழகு பார்ப்பார் .ஒரு நாள் தன் குழந்தை காணாமல் போகவே பல இடங்களில் அவர் தேடினார். இறுதியாக குளத்தை எட்டிப் பார்த்த பொழுது குளத்தில் சிவப்பு கலர் ரிப்பன் இருப்பதைக் கண்டு அக்குளத்தில் அவரும் குதித்து தன் மகனை மீட்டெடுத்த பொழுது,

" *என் செல்ல மகனே பஞ்ச பூதங்கள் உனக்காக படைக்கப்பட்டிருக்கின்றன நீ செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன அவ்வளவு விரைவாக சாக மாட்டாய்*"2

என்றாள். இவ்வாறாக பல்வேறு கனவுகளுடன் லட்சியங்களுடன் பெருமையுடன் தன் தாயால் வளர்க்கப்பட்டவர் முத்துக்குமார் பள்ளி செல்லும் வயதை எட்டினார்.

அழகாக சென்று கொண்டிருந்த முத்துக்குமாரின் சிறுவயதில் இடிஇறங்கியது போல், ஒருநாள் காலை முத்துக்குமாரின் அம்மா தன் மகனை வழக்கம்போல் விதியின் சதி அறியாமல், பள்ளிக்கு மாட்டு வண்டியில் அனுப்பி வைத்து கை காட்டினால், அவருக்கு அன்று தெரியாது தன் அம்மா கடைசியாக தனக்கு கை காட்டுகிறாள் என்று. பள்ளிக்குச் சென்று இரண்டு மணி நேரத்திற்குள் பள்ளியில் வேலை செய்யும் ஆயாம்மா சிறுவன் முத்துக்குமாரிடம்,

“*வா போகலாம் உங்க அம்மா இறந்துட்டாங்க என்றதும் அவனுக்கு அவ்வளவு சந்தோஷம். நீ ஏன் சிரிக்கிறாய் அழுகை வரவில்லையா என்றதும் அவன் அடுத்த பீரியட் எனக்கு கணக்கு நான் ஹோம் ஒர்க் பண்ணல மிஸ் அடிப்பாங்க, நான் தான் இப்ப வீட்டுக்கு போறேனே அதனால நான் சந்தோஷமாக இருக்கேன் என்கிறார்.*”3

சிறுவன் முத்துக்குமார் வீட்டிற்குவந்து பார்க்கும்போது தன் தாய் பாயில் படுத்திருக்கும் நிலையில், வீட்டில் அம்மாவை சூழ்ந்து உறவினர்கள் அழுது கொண்டிருக்கவே எதுவும் புரியாமல், மணல் வீடு கட்டிக் கொண்டு விளையாடினார். இறுதியாக அவரது அம்மாவிற்கு கொள்ளி வை என்றதும், அவர் கடைசியாக முகம் பார்த்து அவரை அறியாமலேயே கண்கலங்கினார் .பிறகு தன் வயதை ஒத்த நண்பர்களிடம் எங்க அம்மா தலையில் நான் தான் நெருப்பு வைத்தேன், எப்படி இருந்தது தெரியுமா என்ற அந்த ஏதும் அறியாத வயதில் தாயின் இறப்பு துயரை உணராது இருந்த முத்துக்குமார், வளர்ச்சி அடைந்த இளமைப் பருவத்தில் தன் தாயாரின் இறப்பை நினைத்து,

*நெருப்பு என்றால்*
*நெருப்பு மட்டுமல்ல*
*நெருப்புக் கொள்ளும் நீர் இருக்கிறது*
*அந்த நீர் கண்ணீர்*”4

என்று வருத்தத்துடன் நா. முத்துக்குமார் கவிதை எழுதி உள்ளார் .தன் தாயின் பிறிவு நா. முத்துக்குமார் உள்ளத்தில் நீங்கா வடுக்களாக பதிந்து உள்ளதை, பாடலாக வடித்துள்ளார். 7ஜி ரெயின்போ காலனி என்ற திரைப்படத்தில் வரும் பாடல் அம்மாவின் நினைவுகளை சுமந்து எழுதிய பாடல் ஆகும்.

“ *எடுத்துப் படிக்கும் முன்பே*
*எரியும் கடிதமாய் தான்*
*உள்ளங்கையில் வெப்பம் சேர்க்கும்*

*விரல்கள் இன்று எங்கே?*

*தோளில் சாய்ந்து கதைகள் பேச*

*முகமும் இல்லை இங்கே!*

*முதல் கனவு முடிந்திடும் முன்னமே*

*தூக்கம் கலைந்ததே*! "5

இந்த திரைப்படபாடல் காதலன் தன் காதலிக்கு பாடும் பாடலாக, நமக்கு காதல் பாடலாக இருந்தாலும் ,முத்துக்குமார் தன் அம்மா தன்னை சிறுவயதிலேயே விட்டு சென்று தன்னுடன் இல்லாத துயரத்தினை எண்ணி எழுதிய பாடல் என அவரது தம்பி ரமேஷ் 'ஆனந்த யாழ்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தாயின் அன்புக்கும் பாசத்திற்கும் ஏங்கிய நா முத்துக்குமார், தன் தாயின் மறுஉருவமாக தன் தாரத்தை காண்கிறார். தன் மனைவி ஜீவ லட்சுமி கருவுற்றபோது ,தன் தாய் தான் தனக்கு மகளாக பிறப்பாள் என எண்ணி தன் தாயின் அன்புக்கு காணிக்கையாக 'தங்க மீன்கள்' படத்திற்காக,'ஆனந்த யாழை மீட்டுகிறாய்' என்னும் பாடலை எழுதினார். இப்பாடலுக்காக தேசிய விருதுகளை பெறப்போகும் அந்த தருணத்தில் மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவரது மனைவி ,'நமக்கு ஆனந்த யாழ் பிறந்திருக்கிறாள்' என்ற செய்தியை தெரிவித்தார். உடனே நா. முத்துக்குமார் தன் மனமகிழ்வை வெளிப்படுத்தும் வகையில் தங்கமீன்கள் படத்திற்கு எழுதிய பாடல் நினைவுக்கு வந்தது. அப்பாடல்,

" *ஆனந்த யாழை மீட்டுகிறாய் அடி*

*நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய்*

*அன்பெனும் குடையை நீட்டுகிறாய்*

*அதில் ஆயிரம் மழைத்துளி கூட்டுகிறாய்"6*

என்பதாகும்.

இவ்வாறாக பல்வேறு வெற்றிகளை பெற்று ,'தமிழகமே தலைமேல் தூக்கி கொண்டாடும் தலைமகனாய் தன் மகன் பாராட்டப்படுவதை பார்க்கும் முன்பே' அவரது தாய் மண்ணுலக வாழ்வை நீர்த்து விண்ணுலகை அடைந்தார்.

**கவிஞர் நா. முத்துக்குமாரின் தந்தை**

*தந்தை மகற்காற்று நன்றி அவையத்து*

*முந்தி இருப்பச்செயல்* " 7

என்ற திருக்குறளின் அடிகளுக்கு ஏற்ப, 'முத்துக்குமாரின் தந்தை தன் மகனை கல்வியில் சிறந்த அறிவுமிக்க சான்றோன் ஆக்க வேண்டும்' என்று எண்ணி அவனை வளர்த்தார்.நான்கு வயதிலேயே தாயை இழந்தவர். அந்த இழப்பை உணரா வண்ணம் தன தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தவர் கவிஞர் நா. முத்துக்குமார் அவர்கள்.

தாயின் இறப்பிற்கு பின்னர் தன் அப்பாவின் கைகளை இறுகப்பற்றிக் கொண்டு இவ்வுலகை கண்டார்.

நிறைய நூல்களை படிக்கும் ஆர்வத்தை முத்துக்குமார் அவர்களிடம் தூண்டியவர் அவரது தந்தை என்றால் அதில் மிகையல்ல. அதிசயமும் அச்சமும் நிறைந்த யதார்த்த உலகில் தன் தந்தையின் கரம் பிடித்து வலம் வரத் தொடங்கினார் நா. முத்துக்குமார் அவர்கள் .வழிநடத்தும் தந்தையின் சுட்டுவிரல்கள் முத்துவை பல்வேறு உலக அறிவு பெற வழிவகுத்து சென்றது. இவ்வுலகம் மிகவும் பயத்தையும் , பதற்றத்தையும், பரவசத்தையும், பன்முகபார்வையையும், கொடுத்த தருணத்தில் தந்தையின் கைப்பிடி விரல்களைப் பற்றி இருந்ததால், அதுவே சிறந்த அனுபவமாக முத்துக்குமாருக்கு மாறியது. தந்தை தன் பிள்ளைகளுக்கு புத்தகத்தையே உணவாக ஊட்டி வளர்த்தார்.இந்த கட்டுரையை படிக்கும் ஒவ்வொரு வாசகரும் சிறந்த பிள்ளை வளர்ப்பை நன்கு கற்று கொள்ளலாம்.

முத்துக்குமாரின் தந்தை ஒரு தமிழாசிரியர் என்பதால்,

“*வீடு நிறைய கிட்டத்தட்ட நாற்பதாயிரம் புத்தகங்களை அடுக்கி வைத்திருப்பார். அவர் வீடு முழுக்க புத்தகங்கள். புத்தக மூட்டைகளுக்கு நடுவில் தான் முத்துக்குமார் தூங்குவார் எனவும், காற்றடிக்கும் மாதங்களும், மழையடிக்கும் வேளைகளும் எங்களைப் பாதுகாப்பதைவிட புத்தகங்களைப் பாதுகாப்பதே எங்கள் கவலையாக இருந்த காலம் அது*”8

புத்தகம் வாங்குவதற்காக அதிக கடன் வாங்குவார் என்பதை, ‘அப்பாவின் உலகம் என்னும் தலைப்பில் ‘தன்னுடைய அப்பா ஒரு மூட்டை புத்தகம் கிடைத்தால் தங்களையும் விற்று விடுவார் என புத்தகம் வாங்குவதே தன் தந்தையின் சம்பளத்தில் பெரும்பகுதியை செலவிடுவார் என முத்துக்குமார் ‘பட்டாம்பூச்சி விற்பவன்’ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இதனை நாம் படிக்கும் போது தந்தை தன் பிள்ளைகளை எவ்வாறு புத்தக அறிவு ஊட்டி வளர்க்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்துக்கொள்ள முடிகிறது. இன்றும் நாம் கவிஞர் முத்துக்குமாரை சிறந்த பாடலாசிரியர் என கொண்டாட, அவரது தந்தை அவருக்கு அளித்த புத்தக வாசிப்பு என்றால் அதில் மிகையாகாது.

**கவிஞர் நா. முத்துக்குமாரின் கல்வியும் ஆளுமை வளர்ச்சியும்:**

பள்ளிப் பருவம்

“*கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு*”9

ஒருவர் கற்ற கல்வியானது ஏழு பிறவியிலும் நிலைத்து நிற்கும் என்பதனை நா. முத்துக்குமாரின் தந்தை பள்ளி ஆசிரியராக பணிபுரிவதால், நன்கு உணர்ந்து உள்ளார்.பள்ளி நினைவுகள் என்றும் அழியா நிகழ்வாக , அனைவர் மனதிலும் பசுமரத்து ஆணி போல் நிலைத்து இருக்கும். அதுபோலத்தான் நா. முத்துக்குமாரின் பள்ளி அனுபவமும் அவர் மனதில் நீங்கா இடம்பெற்றுள்ளது. . விளையும் பயிர்

முளையிலேயே தெரியும் என்பதற்கு ஏற்ப மூன்றாம் வகுப்பு படிக்கும் போது, ‘அருவியையும் ஆட்காட்டி குருவியையும்’ தன் கற்பனையில் தோய்ந்தெடுத்து கவிதை என தலைப்பிட்டார். பின்பு ‘சந்தை ‘என்ற தலைப்பில் சிறுகதை எழுதி அப்பாவை படிக்க சொன்னார். அச்சிறுகதையில் சில மாற்றங்களை கொண்டு வர, அவரது தந்தை அவரை ராஜாஜி காய்கறி சந்தைக்கு நேரடியாக அழைத்துச் சென்று அனுபவத்தை பெற செய்து சிறுகதையின் கருப்பொருளை மாற்றி அமைக்க செய்தார்.

கவிஞர் நா. முத்துக்குமார் தனது பள்ளிப்படிப்பை காஞ்சிபுரத்திலேயே தொடங்கினார். ஐந்தாம் வகுப்பு முடிந்ததும், ஆறாம் வகுப்பு சேர காஞ்சிபுரம் ஆந்திரசன் மேல்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். இப்பள்ளி சென்னை கிறிஸ்தவ கல்லூரி கட்டிய ஆண்டர்சன் என்னும் ஆங்கிலேயர், 1837 ஆம் ஆண்டு கட்டிய கிறிஸ்துவ மிஷனரி பள்ளியாகும். பெருந்தலைவர் காமராசர் ஆட்சிக் காலத்தில் கல்வித்துறை இயக்குனராக இருந்த நெ. து சுந்தரவடிவேலு படித்த பள்ளி அது. எவ்வித ஆற்றலும் இல்லாமல் நுழைந்த முத்துவை ‘மகாகவிஞனாக உருவாக்கி அனுப்பியதில்’ இப்பள்ளிக்கு பெரும் பங்கு உண்டு.

காலத்தால் அழியாத நிலைத்த செல்வம் கல்வி என்பதற்கு ஏற்ப பள்ளி கல்வியிலேயே பல திறன்களை வளர்த்துக் கொண்டு, இசை, ஓவியம், கலை, கவிதை என பல்வேறு கலைகளில் திறமையை வெளிப்படுத்திய முத்துக்குமார் புதிய பரிமாணத்தில் திரைத்துறையில் காலடி எடுத்து வைக்க அப்பள்ளி அடிக்கோடியது. பள்ளியின் ஒவ்வொரு அங்கங்களையும் கண்ணில் காண்பவ என அனைத்தையும் தன் கவிதைகளில் வடிவமைத்தார். முத்துக்குமாருக்கும் மற்றவர்களைப் போலவே பள்ளி வகுப்பறைக்கு வெளியே தான் பாடங்களை கற்று தந்தது, ஆயினும் என்ன கற்றுத்தர மட்டுமா பள்ளிகள். பள்ளியைப் பற்றி நினைக்கையில் பிளஸ் டூ படிக்கையில் ஆனந்த விகடனில் முத்துக்குமார் எழுதிய கவிதை தான் அவருக்கு கவிஞன் என்ற பெயரை பெற்று தந்தது அந்தக் கவிதை.

*யாரும் மெனக்கெடாமலே*

*வருடந்தோறும் உருவாகிறார்கள்*

*சில அறிவாளிகளும் முட்டாள்களும்*. “10

என்பதாகும் . சிறுவயதிலேயே முத்துக்குமார் அவர்கள் தான் காணும் சமுதாய சீர்கேடுகளை துணிச்சலாக எழுதும் திறன் பெற்றுஇருந்ததை மேற்கண்ட கவிதையின் மூலம் நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இக்கவிதையினால் கோவம் கொண்ட ஆசிரியர்கள் அவரை அப்பள்ளியில் இருந்து நீக்கினார்கள். பிறகு அவரது தந்தையின் நண்பரான இலக்கிய வட்டம் வெ.நாராயணன் அவர்களின் உதவியுடன் பள்ளிக்குள் மீண்டும் நுழைந்தார்.

இவ்வாறு பல கவிதைகளை எழுதுவது முத்துகுமாருக்கு மிக பிடித்தமான செயலாக இருந்து வந்தது. நா.முத்துகுமாருக்கு சிறுவயதிலிருந்து பத்தாம் வகுப்பு வரை

எழுதிய கவிதைகளை தொகுத்து ‘தூசிகள்’ என்னும் தலைப்பில் நூலாக வெளியிட ஆசை வந்தது. அதற்காக நிறைய பதிப்பகங்களை நாடி தன் கவிதை தொகுதியை காட்டி பதிபிக்க வேண்டினார். ஆனால் அவ்வாசையினை பேராசை என்று ஒவ்வொரு பதிப்பகமும் இவரது முயற்சிக்கு தடை செய்தனர்.ஆயினும் விடா முயற்சியுடன் ஒவ்வொரு பதிப்பகத்தின் வாசல் கதவையும் முத்துக்குமார் தட்டிக்கொண்டே இருந்தார். இதற்கு காரணம் இன்றைய நிலையில் கவிதை புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. கவிதை புத்தகங்களை வெளியிட பதிப்பகங்கள் உற்சாகமாக முன் வருகின்றன .ஆனால் 1980 களில் பிரபலம் அல்லாதவர்களின் கவிதை தொகுப்பை வெளியிடுவது தற்கொலைக்கு சமம், என்று பதிப்பாளர்கள் கருதியது தான். இதனால் மனம் தளராத முத்துக்குமார் தன்னம்பிக்கையுடன் தன் தந்தையின் உதவியை வேண்டினார். தந்தை தான் சேமித்து கொடுத்த பணத்தை கொண்டு ‘தூசிகள்’ என்று இவரது முதல் தொகுப்பை காஞ்சி இலக்கிய வட்டம் மூலமாக வெளியிட்டு விழாவும் நடத்தினார். உண்மையில் அந்த புத்தகம் நல்ல வரவேற்பை கொடுத்தது.கவிஞர் நா. முத்துக்குமார் இலக்கிய வட்டாரத்தில் அறிமுகமானார்.

**முத்துக்குமாரின் பல்துறை அனுபவம்**

இளமைப் பருவத்தில் முத்துக்குமார் அவர்கள் மனம்போன போக்கில் பல்வேறு தொழில் தொடங்க ஆர்வம் கொண்டார். அவரது தந்தையும் ஒவ்வொரு கோடை விடுமுறையின் போதும் முத்துக்குமாருக்குள் கோடீஸ்வர கனவு ஒன்று பூக்கத் தொடங்கும். அதற்கு காரணம் இவர் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது தெற்கு மாட வீதி கிளை நூலகத்தில் வாசித்த,’ நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்’ என்ற புத்தகமே ஆகும். அந்த புத்தகத்தை படித்ததிலிருந்து சஃபாரி சூட் இவர்அணிந்து காரில் இருந்து இறங்குவது போலவும், இவரிடம் வேலை செய்யும் நூற்றுக்கணக்கானவர்கள் இவருக்கு வணக்கம் தெரிவிப்பது போலவும்,லயன்ஸ் கிளப் ,ரோட்டரி கிளப் என்று சினிமாவில் பார்த்த கிளப்புகளில் எல்லாம் இவர் தலைமை உரையாற்றுவது போலவும் ,கனவுடன் துருப்பிடித்த சைக்கிளில் சுற்றிக் கொண்டிருந்தார். இதனை அறிந்து கொண்ட முத்துக்குமாரின் தந்தை இவரை சென்னையில் சிறு தொழில் பற்றி சங்கமித்ராவில் நடத்தப்பெற்ற இரண்டு நாள் பயிற்சி வகுப்பிற்கு அனுப்பி வைத்தார்.அந்தப் பயிற்சி வகுப்பில் சுயம்புலிங்கம் என்பவர் வாசித்த கவிதை இவர் மனதில் சுயதொழில் புரியும் தன்னம்பிக்கையை உருவாக்கியது.

“*அதோ மேகங்கள்*
*மழையை கொண்டுபோகின்றன.*
*நம்முடைய குளங்கள்*
*வறண்டு விட்டன.*
*நம்முடைய பயிர்கள்*
*வாடி விட்டன.*
*விடாதே!*

*மேகங்களை மடக்கு.*

*பணிய வை!*11

என சுயதொழில் பயிற்சி வகுப்பில் சுயம்புலிங்கம் என்பவர் எளிமையான வார்த்தைகளுடன் சிறு தொழில் செய்யும் தன்னம்பிக்கையை கொடுத்த அந்த கவிதை, இப்போதும் முத்துக்குமார் நினைவில் நிற்கிறது. புளிய மரத்தடியில் பாய் பிரியாணி வைக்கிறார். சுவையாக இருக்கிறது, ஆரோக்கியமாகவும் இருக்கிறது, மக்கள் விரும்பி சாப்பிடுகிறார்கள், நாம் ஏன் முயற்சிக்கக் கூடாது என மேற்கண்ட இந்த கவிதை வரிகளானது, முத்துகுமார் அவர்களுக்கு சுய தொழில் புரிய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது.

மேற்கண்ட கவிதைகள் மூலம் உற்சாகமடைந்த முத்துக்குமார் ஊருக்கு திரும்பியதும் தானும் சுய தொழில் தொடங்க நினைத்து திண்ணையில் மிட்டாய் கடை ஒன்றை வைத்தார் .தெரிந்தவர் அனைவரும் பணம் கொடுத்து வாங்காமல் கடன் சொல்ல அத்துடன் அத்தொழில் மிகுந்த நட்டம் ஏற்பட்டு முத்துக்குமாரின் முதல் தொழிலதிபர் கனவு ஈடேறவில்லை. பிறகு ஊதுவத்தி செய்து விட்டார் .அந்தத் தொழில்புகைந்து அணைந்து போனது. பபுல்ஸ் ஷாம்பு வியாபாரம் செய்தார் ,அந்த ஷாம்பு அதிகமாக நுரை கொடுத்த போதிலும் கிராம மக்கள் வம்சத்தில் பம்ப் செட்டில் தேங்காய் நாரை தேய்த்து குளித்ததால் ஷாம்புகள் நீர்க்குமிழிகள் உடைந்து போனது. மீன் விற்று வின்மீன் பிடிக்கும் கனவு கண்டார். மீன்கள் இறந்து அது கனவாகவே போனது.தவணை முறையில் துணி வியாபாரம் செய்தார் .அந்தத் திட்டம் சாயம் போன துணியாய் ஏமாற்றம் அளித்தது.பிறகு கேமரா கலைஞர் ஆகவேண்டும் என்று எண்ணி தந்தையிடம் அடம் பிடித்து யாஷிகா ஆட்டோமேட்டிக் கேமரா ஒன்றை வாங்கிக் கொண்டார். அந்த கேமராவை வைத்து ஊரெல்லாம் சுற்றித்திரிந்து புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அருகில் இருந்த ஒரு கிராமத்தில் ஐந்து வயது சிறுவனின் சடலத்தை போட்டோ எடுக்க சென்றபோது கேமரா கண்களைத் திறந்து மூடியது. இறந்து கிடந்த அந்த குழந்தையின் கண்களை சந்தித்த பிறகு,

‘ *அதிர்ச்சியை சந்தித்தான் இந்த உலகின் மீதான அவநம்பிக்கையை சந்தித்தான். அதை சாத்தியப்படுத்தும் மரணத்தை சந்தித்தான் இவன் கேள்வி கேட்க நினைத்த கடவுளை சந்தித்தான். சுற்றிலும் சாக்கடை நீர் பெருகி கிடக்க அவற்றின் வாள்களில் மொய்த்துக் கொண்டிருக்கும் கொசுக்களை சந்தித்தான். இதை ஏதும் கண்டு கொள்ளாமலும் தன் போக்கில் ஓடிக்கொண்டிருக்கும் சமூகத்தை சந்தித்தான்.*’12

இவ்வாறாக மனித வாழ்வின் நிலையாமையை உணர்ந்த அவர் அன்றிலிருந்து புகைப்பட கலையை அறவே விட்டுவிட்டார். பல்வேறு தொழில்களை செய்து எந்தத் தொழிலும் முழுமையாக ஈடுபடாத முத்துக்குமாரை கண்ட அவரது தந்தை இவரிடம்,

‘ *ஒரு வியாபாரி கவிதை எழுதினால் அவனிடம் இருக்கும் காசு மட்டும் காணாமல் போகும். ஒரு கவிஞன் வியாபாரி ஆனால் அவனிடம் இருக்கும் கவிதையே காணாமல் போகும்*’13

என்றார். இதை உணர்ந்த முத்துக்குமார் தனக்குத் தொழில் கவிதை என்ற மனப்போக்கில்,

*எமக்குத் தொழில் கவிதை*

*நாட்டிற்கு உழைத்தல்*

*இமைப்பொழுதும்*

*சோராதிருத்தல்*14

என்று பாரதியாரின் பாடலுக்கேற்ப பல நூல்களை நன்கு படித்து தன் அறிவை வளர்த்துக் கொண்டார்.

**இலக்கியவட்ட அறிஞர்கள் அறிமுகப்பயணம்**

சிறுவயது முதலே கவிதை இலக்கிய துறையில் ஆர்வம் கொண்ட கவிஞர் முத்துக்குமார் , தொடக்கத்தில் என்ன படிப்பது எதைப் படிப்பது என்று அறியாமல் ‘கண்டதை படித்தால் பண்டிதன் ஆகலாம்’ என்ற பழமொழிக்கேற்ப கிடைத்ததெல்லாம் படித்துக் கொண்டிருந்தார். தினந்தோறும் பள்ளி முடிந்ததும் காஞ்சிபுரத்தில் இயங்கிக் கொண்டிருந்த கம்பன் கழகம் ,கவிதைச்சோலை, சிந்தனையாளர் பேரவை, திருக்குறள் மன்றம் என்று பல்வேறு இலக்கிய அமைப்புகளுக்குச் சென்று கவிதைகளை எல்லாம் படித்து காட்டுவார்.

முத்துக்குமாரின் இலக்கிய ஆர்வத்தை கண்ட அவர் தந்தை ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை காஞ்சிபுரம் பூக்கடைசத்திரத்தில் இருந்து டிவிஎஸ் பள்ளியில் நடந்த இலக்கிய வட்ட கூட்டத்தற்கு இவரின் தந்தை இவரை அழைத்துச் சென்று அந்த இலக்கிய வட்டத்தை நடத்தும் வெ. நாராயணனை அறிமுகப்படுத்தி வைத்தார் .அவர் முத்துக்குமாரின் கவிதை ஆர்வத்தைக் கண்டு அவரை தத்தெடுத்துக் கொண்டார். அந்த இலக்கிய வட்டத்தில் லா.ச.ராவின் அறிமுகம் முத்துக்குமார்க்கு கிடைத்தது.அவரோடு தர்ம ரத்தினகுமார், இயக்குனர் ஆர்கே செல்வமணி ,புல்வெளி சிற்றுகளின் ஆசிரியர் சே. காமராசன், கவிஞர் அமுதன் ஆகியோரை அறிந்து கொண்டார். இந்த இலக்கிய வட்டத்தின் வழி சிலர் எழுதிய கவிதைகள் எல்லாம் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன .இதனால் பல முக்கிய எழுத்தாளர்களை அறிந்து கொண்டு அவர்களோடு இலக்கிய பயணத்தை தொடங்கினார்.

கோடை விடுமுறையின் போது இவரின் தந்தை இவருக்கு அவசியம் படிக்க வேண்டிய புத்தகங்கள் என்று சில புத்தகங்களை கொடுத்தார். முத்துக்குமாரின் தந்தை அவரிடம், ‘நீ விளையாடும் விளையாட்டு எவ்வாறு ஆனந்தம் அளிக்கிறதோ, அதைவிட

உயர்ந்தது புத்தகங்கள் என்று நினைப்பாய்' என முத்துக்குமாரின் தந்தை முத்துக்குமாருக்கு அறிவுரை கூறினார்.அன்றிலிருந்து புத்தக வாசிப்பை தன் சுவாசிப்பாக கொண்டார் நா. முத்துக்குமார். பின்னாளில் முத்துக்குமார் பார் போற்றும் கவிஞனாக மாற, இப்புத்தக வாசிப்பு பெருந்துணை புரிந்தது.

கல்லூரி பருவம்

"*கல்லூரி பருவம் என்பது*
*காலம் ஒரு மாணவனைக்*
*கூட்டு புழுப் பருவத்திலிருந்து*
*வண்ணத்துப்பூச்சியாக மாற்றி*
*வெளியே பறக்க விடும் பருவம்*"15

என்று வேடிக்கை பார்ப்பவன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் பொழுதே முத்துக்குமாருக்கு காஞ்சியில் உள்ள பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் படிக்க வேண்டும் என்று விருப்பம் எழுந்தது. இயற்பியலில் 95 சதவீதம் மதிப்பெண் பெற்ற இவர் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் வகுப்பில் சேர்ந்து தம் விருப்பத்தை நிறைவு செய்து கொண்டார். தந்தையிடம் கல்லூரி படிப்பு செலவு எதிர்பார்க்காமல் பல்வேறு கவிதைகளை எழுதி இதழ்களில் வெளியிட்டு அதன் வழி கிடைத்த பணத்தை கொண்டு தன் படிப்பை தொடர்ந்தார். கல்லூரியில் இவருடன் படித்த சக மாணவன் ஆன இராஜராஜன் கவிதை எழுதும் திறம் பெற்றவர். இருவரும் இணைந்து பல கவிதைகளை எழுதினார்கள். 'நிலா' என்ற தலைப்பில் இருவரும் கவிதை எழுதினார்.

"*அழுது புரண்டு*
*நான் அலறிய ராத்திரிகளில்*
*நிலா இருந்தது*
*சோறு இருந்தது*
*ஊட்டத்தான் தாயில்லை*"

என்று முத்துக்குமாரும்,

"*ஏழையின் பசிக்கு*
*எட்டாத தோசையாய்*
*தெரிந்தது நிலா*"16

என்று ராஜராஜனும் எழுதினார்கள். ராஜராஜனின் தீவிர நட்புதான் முத்துக்குமாரை பின் காலத்தில் சினிமா உலகிற்கு அழைத்துச் சென்றது.

உயர்நிலைக் கல்வியை முடித்ததும், பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் முடித்தார். இளங்கலை இயற்பியலில் 90 விழுக்காடு மதிப்பெண் பெற்ற முத்துக்குமார், முதுகலையில் தமிழ் இலக்கியம் கற்க விருப்பம் கொண்டார். அது உன்

சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் தான் படிக்க வேண்டும் என உறுதியாக இருந்தார். 'பச்சையப்பன் படிக்கட்டும் பைந்தமிழ் பாடும்' என்ற தொடருக்கு ஏற்ப அரசியல், இலக்கியம், விஞ்ஞானம், திரைப்படம், பத்திரிக்கை என எந்த துறையை எடுத்தாலும், அதில் ஒரு பச்சையப்பன் கல்லூரி மாணவன் நிச்சயம் இருப்பான் என்பதை அறிந்த முத்துக்குமார், பாரதியின் கூற்றுக்கேற்ப திண்ணிய மனதோடு தமிழ் இலக்கிய வகுப்பில் சேர பெரிதும் முயன்றார்.

முத்துக்குமார் திரைத்துறை இயக்குனர் வாய்ப்புக்கான தேடலில் இருந்தபோது, திரைப்படங்களை படங்களாக பார்க்கவில்லை பாடங்களாக பார்த்தார். இதற்கு முன் தான் கண்ட கனவு எல்லாம் அழித்துவிட்டு திரைப்பட இயக்குனராக வேண்டும் என்ற புதிய கனவை உரம் போட்டு வளர்க்க ஆரம்பித்தார். வகுப்பறைகளை விட திரையரங்குகளில் தான் இவர் அதிகம் தவம் இருந்தார். இவர் திரைத்துறை இயக்குனர் வாய்ப்புக்கான தேடலில் இருந்த பொழுது அம்மா வழியிலும், அப்பா வழியிலும் பேரறிஞர் அண்ணா இவர் உறவினர். அண்ணாவின் மகன் சி. என். ஏ பரிமளத்திடம் அழைத்துச் சென்று முத்துக்குமார் அப்போது எழுதிய கவிதையை சொல்ல சொல்வார், உரத்த குரலில் இவர் சொல்லி முடித்ததும், பரிமளம் அவர்கள் இதை ஒரு காகிதத்தில் எழுதிக் கொடு நான் காஞ்சி பத்திரிகையில் பிரசிக்கிறேன் என்று முத்துக்குமாரை உற்சாகப்படுத்தினார்.

பச்சையப்பன் தமிழ்த்துறை தலைவரை சந்திக்க நா. முத்துக்குமார் பத்திரிகைகளில் எழுதி வெளிவந்த, ஐநூறுக்கும் மேற்பட்ட படைப்புகள் அடங்கிய கோப்பு மற்றும் வளரிளம் பருவத்தில் எழுதிய 'தூசிகள் ' என்ற கவிதை தொகுப்பு ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, இளங்கலை இயற்பியல் வகுப்பில் தமிழ்ப்பாடம் வகுப்பு எடுத்த பேராசிரியர் எஸ். குருசாமி அவர்களின் உதவியோடு, பச்சையப்பன் கல்லூரியில் அப்போதைய தமிழ்துறை தலைவர் முனைவர் தே. ஞானசுந்தரம் அவர்களை சந்தித்தார். அங்கு பேராசிரியர் எஸ்.குருசாமி துணைத்தலைவரை நோக்கி,

"*இவன் நல்லா கவிதை எழுதுவான் சார் சயின்ஸ்ல 90% மதிப்பெண் எடுத்துட்டு தமிழ் படிக்கணும்னு வந்து இருக்கான் நிச்சயம் நீங்க இவனுக்கு சீட்டு கொடுக்கணும் என்றார்*"17

ஒரு மாணவனை கல்லூரியில் சேர்க்க ஆசிரியரே வந்து நற்சான்று அளிக்கும் பேரு அனைவருக்கும் கிட்டாது. 'கிடைத்ததற்கான நெல்லிக்கனி கிடைக்கப்பெற்றது போல' அரிய வாய்ப்பு முத்துக்குமாருக்கு கிட்டியது. இது அவருடைய புலமைக்கு கிடைத்த நற்பெயர் ஆகும்.

நா. முத்துக்குமார் இயற்பியலில் 90 சதவீத மதிப்பெண் பெற்று இளங்கலை முடித்து இருந்ததால், தமிழ் படிக்க வேண்டாம் இயற்பியலையே மேற்படிப்பாக படிக்க கல்லூரி தமிழ்த்துறை தலைவர் முனைவர் தே.ஞானசுந்தரம் கூறினார். அதற்கு முத்துக்குமார் எனக்கு பி.டெக் சீட்டு கிடைத்தது .ஆனால் அப்படிப்பு வேண்டாம்

என்று முடிவு எடுத்து வந்திருக்கிறேன். சேர்க்கைக்கு அனுமதி தருவீர்களா மாட்டீர்களா எனத்திடமாக பதில் வினா எழுப்பினார். அவரிடத்தில்

*“ஒரு மாணவன் வேதியல் பாடம் படித்தால் அந்தப் பாடப் புத்தகம் வேதியலை மட்டும் தான் கற்றுத் தரும். இப்படி தான் கணிதம்,இயற்பியலும், கணிப்பொறியும் பொறியியலும், மருத்துவமும் அந்த துறையை சார்ந்த அறிவை மட்டுமே வளர்க்கும். ஆனால் இலக்கியம் மட்டுமே வாழ்க்கையை சொல்லிக் கொடுக்கும். சக மனிதர்கள் மீதான மனித நேயத்தை ,தோல்விகளை துரத்தும் தன்னம்பிக்கையை, புல் நுனியில் தூங்கும் பனித்துளியின் அழகிகயலை வேறு எந்த பாடம் சொல்லிக் கொடுக்கும்”18*
என்று வினா எழுப்பி பதிலளித்தார். இப்படி கண்ணீர் மல்கி கசிந்துருகி தமிழை காதலித்து விரும்பி கற்றார்.

ஆனால் முத்துக்குமார் தனக்கு தமிழ் மீதுள்ள ஆர்வத்தினால் தான் தமிழ் இலக்கியம் படிக்க வந்தேன் என்று பிடிவாதமாக கூறுவதை கேட்டு வியந்த பேராசிரியர் ,அனுமதித்தந்து சில அறிவுரைகளையும் தந்து ஊக்கப்படுத்தினார். சும்மா உங்க உறுதியை சோதிக்க தான் அப்படி சொன்னேன். ஒழுங்கா படிச்சா தமிழ் எவனையும் தெருவுல நிக்க வைக்காது. ஓய்வாக இருக்கும் போது வாங்க நான் ரசிச்ச நூற்றுக்கணக்கான பாடல்களை குறித்து குறிப்பு கொடுக்கிறேன். அதை புரிஞ்சுகிட்டு மனப்பாடம் பண்ணா மட்டும் போதும். வாழற வரைக்கும் நீங்க தமிழ் பேசியே பிழைச்சுக்கலாம் என்றார். இதைக் கேட்ட நா. முத்துக்குமாருக்கு புதிதாய் மலர்ச்சி பிறந்தது.

பச்சையப்பன் கல்லூரியில் ‘நாவலர் ‘என்ற பட்டத்திற்காக சுதந்திரம் என்னும் தலைப்பில் கவிதை போட்டி நடந்தது. அதில் அனைத்து துறை மாணவர்களும் கலந்து கொண்டு பக்கம் பக்கமாக வாசிக்க, முத்துக்குமார் 63 வது போட்டியாளராக வந்து மூன்று வரியில் கவிதை வாசித்தார். அக்கவிதை

“*புறாக்கள் வளர்க்கும் எதிர் வீட்டுக்காரன்*
*என்னிடம் இருந்து பறிக்கிறான்*
*பூனை வளர்க்கும் சுதந்திரம்*”19

என்பது ஆகும். கவிதைக்கு முதல் பரிசு முத்துக்குமாருக்கு கிடைத்தது.பக்கம் பக்கமாக கவிதை படித்தவர்கள் மத்தியில் மூன்றே வரிகள் படித்து தன்னை தேர்ந்தெடுத்த நடுவர்களுக்கு மானசீகமாக நன்றி கூறி ,அந்த சம்பவம் தான் முத்துக்குமாருக்கு சுருங்கச் சொல்லும் வித்தையை கற்று தந்தது. எல்லா கவிதை போட்டிகளிலும் அரை மணி நேரத்துக்கு முன்பு தான் தலைப்பு கொடுப்பார்கள் . அவ்வாறு அன்று அந்த போட்டிகளில் எடுத்த பயிற்சிதான் இத்தனை ஆண்டுகள் அதிக படங்களில், அதிக பாடல்களை எழுதி சிறந்தபாடல் ஆசிரியராக தன்னை முன்னிறுத்தியதாக ‘வேடிக்கை பார்ப்பவன்’ என்ற நூலில் கொஞ்சம் முத்துக்குமார் கூறியுள்ளார்.

தமிழ் இலக்கிய ஆர்வத்தினால் அனைத்து கல்லூரியில் நடந்த கவிதை போட்டிகளிலும் கலந்து கொண்டு முதல் பரிசை பெற்றார். கவிதை மட்டும் அல்லாது கானா பாடல்களையும் பாடி தமிழ் துறைக்கு பெருமை சேர்த்தார். இவ்வாறு அடித்தட்டு மக்களின் வாழ்க்கையையும் வலிகளையும் அந்த வரிகளின் ஊடாக அறிந்து கொண்டார்.அவர் கல்லூரி போட்டிகளில் மட்டும் நாட்டம் கொள்ளாது, இதழ்களில் கவிதை வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டினார். கணையாழி என்ற இதழில் வெளிவந்த அவரது 'தூர்' என்ற கவிதை சிறந்த கவிதையாக தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிப்பு விழாவிற்கு வரும்படியாக அழைப்பிதழ் வந்தது. அவ்விழாவில் எழுத்தாளர் ஜெயகாந்தன், அசோக மித்திரன், இந்திரா பார்த்தசாரதி கஸ்தூரிரங்கன், சுஜாதா, இன்குலாப், பாரதி கிருஷ்ணகுமார், நடிகர் கமலஹாசன் உள்பட பல பிரபலங்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

அவ்விழாவில் எழுத்தாளர் சுஜாதா தமிழில் சிறந்த கவிதைகளை பட்டியலிட சொன்னால் நா. முத்துக்குமார் எழுதிய 'தூர் கவிதையை 'கூறுகிறேன் என்று கூறி, அக்கவிதையை வாசித்தார். கவிதையை வாசித்த பிறகு முத்துக்குமாரை அழைத்து சிறுவனாக இருக்கிறாய் என்ன செய்கிறாய் என்றதும், எம். ஏ தமிழ் இலக்கியம் படித்து வருகிறேன் என்றார் முத்துக்குமார். உடனே சுஜாதா தன் சட்டை பையில் இருந்து ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொடுத்தார். முத்துகுமார் அதனை உடனே வாங்கி அவையில் எண்ணினார். இந்நிகழ்வை அது அனைவரும் திகைத்துப் பார்க்க, முத்துக்குமார் ஆயிரம் ரூபாயிலிருந்து 500 ரூபாய் சுஜாதாவிடம் கொடுத்து ஐயா, நான் கணையாழியின் ரசிகன் அதன் வளர்ச்சிக்காக இதை வைத்துக் கொள்ளுங்கள் என்றார். அவையில் இருந்தவர்கள் கரவொலி எழுப்பினர்.

பச்சையப்பன் கல்லூரியில் முத்துக்குமார் தொல்காப்பியனின் மரபியலில், வள்ளுவனின் வாழ்வியலில், கம்பனின் விருத்தத்தில், நாயன்மார்களின் ஆன்மீகத்தில், இளங்கோவடிகளின் சீற்றத்தில், கலிங்கத்துபரணியின் களியாட்டத்தில், குற்றால குறவஞ்சியின் அழகியலில், அருணகிரிநாதரின் சந்தத்தில், சித்தர் பாடல்களின் தத்துவத்தில், சங்க இலக்கியப் பாடல்களின் சங்கமத்தில், நாட்டுப்புற இலக்கியப் பாடல்களின் நந்தவனத்தில் தன் மனதை உள் செலுத்தி, உணர்ந்து கற்றுத் தெளிந்து முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றார்.

**முத்துக்குமார் முதல்திரைப்பட பாடல் ஆசிரியர் வாய்ப்பு**

உதவி இயக்குனராய் இருந்த முத்துக்குமாரை பாடல் எழுதி தர சொல்லி அறிவுமதி இடம் வற்புறுத்தினார்கள். கவிஞர் அறிவுமதி முத்துக்குமாரிடம் நீ நன்றாக கவிதை எழுதுகிறாய், உனது கவிதை வரிகள் அனைத்தும் எண்ணிலடங்கா பொருள் தருவன. ஒரு முறை பாடல் எழுத முயற்சி செய் உனக்கு பிடிக்கும் என ஊக்கப்படுத்தவே முத்துக்குமாரும்,

*வெள்ளத்தனையும் மலர் நீட்டம் மாந்தர்தம்*
*உள்ள தலையது உயர்வு* 27

என்ற குறளுக்கு ஏற்ப அப்பணியிலும் அவர் தீவிரமாக முயற்சி மேற்கொண்டார். முத்துக்குமாரை திரை உலகிற்கு பாடல் ஆசிரியர் அறிமுகப்படுத்தியவர் இயக்குனர் சீமான். முத்துக்குமாரின் கவிதைகள் மீது காதல் கொண்டதால் அவரை தான் இயக்கம் 'வீரநடை' படத்திற்கு பாடல் எழுதி தர சொன்னார். முத்துக்குமார் கவிஞர் அறிவுமதியின் ஆசியைப் பெற்று, சீமான் அவர்களிடம் பாடலுக்கான சூழலை கேட்டார். அவர் கதாநாயகி அறிமுகம், அவள் இயற்கையை ரசிப்பவர்களாக பாடல் இருத்தல் வேண்டும் என கூறினார். முத்துக்குமாரும் அவரது கன்னிகாபுரம் கிராமத்தின் நிகழும் இயற்கை சூழலை மனதில் நிறுத்தி தன் முதல் பாடலை எழுதினார்.

*"முத்து முத்தா பூத்திருக்கும்*
*முல்லைப்பூவை புடிச்சிருக்கு*
*நட்சத்திர கால் பதிக்கும்*
*வாத்து கூட்டம் பிடிச்சிருக்கு*
*செம்பருத்தி கொண்ட போட்ட*
*சேவலையும் புடிச்சிருக்கு 28*

என்பதாக இப்பாடல் அமைந்திருக்கிறது. தமிழில் அதிக அளவில் உவமைகளோடு உருவகங்களோடும் வெளியான முதல் பாடல் என்ற மகுடத்தை சூட்டிக்கொண்டால் நா. முத்துக்குமார் இப்பாடலின் தொடக்க வரியை அவரது பெயரிலேயே எழுதியது இயக்குனர்களுக்கு மத்தியில் பெரும் மதிப்பை ஏற்படுத்தியது. இப்படம் வெளிவருவதற்கு முன்பே 30க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு பாடல்களை எழுதி சிறந்து விளங்கினார் கவிஞர் நா. முத்துக்குமார்.தான் மறையும் வரை திரையுலகில் கொடிகட்டி வாழ்ந்தார்.

**கவிஞர் நா முத்துக்குமாரின் படைப்புகள்**

படைப்பாளியின் எழுத்து அறிவினை அடிப்படையாகக் கொண்டு தோன்றினாலும், அப்படைப்புக்கு பின்னணியாக அமைவது படைப்பாளி பிறந்து வளர்ந்த வாழ்க்கை சூழல்தான். படைப்பாற்றலுக்கு துணையாகவும் தூண்டுகோலாகவும் நிற்கின்றன. சினிமா மேடைகளில் மட்டுமல்லாமல் இலக்கிய மேடைகளிலும் தம்மை நிலைப்படுத்திக் கொண்டவர் நா. முத்துக்குமார். இவரின் எழுத்துக்கள் அனைத்தும் 'ஆல் போல் விரிந்து அருகு போல் மக்கள் மனதில் வேரூன்றி' நிற்கின்றன. தம் பள்ளிப் பருவத்தில் இருந்தே தம் படைப்புலக வாழ்க்கையை தொடங்கியவர். அவர் ஏழு கவிதை நூல்களையும், ஆறு கட்டுரை உரைநூல்களையும், ஒரு நாவலையும், திரை உலகிற்கு 1500க்கும் மேற்பட்ட பாடல்களையும் தந்தவர்.

**மறைவு**

சாதாரண நெசவாளர் குடும்பத்தில் பிறந்த முத்துக்குமார், அயராது இரவு பகல் பாராது, கடும் உழைப்பால் தன்னம்பிக்கையுடன் படிப்படியாக முன்னேறி, இலக்கிய உலகில் தனக்கென்று ஓர் இடத்தை உருவாக்கி, தன் வாழ்நாளை பாடல் எழுதுவதிலேயே அர்ப்பணித்தவர். குடும்பத்தின் நலனை நினைத்து பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டி உழைத்தவர். தன் உடல் நலத்தின் மீது அக்கறை காட்டவில்லை கால நேரம் பார்க்காமல் உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என உழைப்பின் உச்சத்தை பெயருக்கு ஏற்றார் போல், பல முத்தான வரிகளை தந்த கவிஞர். திரையுலகில் பல முத்தான வரிகளை எடுப்பதற்காக திரைத்துறை கடலுக்குள் மூழ்கிய போது, அங்கு அவரின் மீது மஞ்சள் கறை படிந்து மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு, தனது 41 வயதிலேயே தன் இல்லத்தில் 14. 8. 2016 அன்று காலை இறைவனடி சேர்ந்தார்.

கவிஞர் நா முத்துக்குமாரின் இறப்பனை பொறுக்க முடியாத அவரை நேசித்த திரையுலக நண்பர்களும், பத்திரிக்கை பதிப்பாளர்களும் சேர்ந்து அவரது நினைவை போற்றும் வகையில், ‘ஆனந்த யாழ்’ மனதை நனைக்கும் கண்ணீர் மழை என்ற புத்தகத்தினை வெளியிட்டனர். இவரது இறப்பினை தாங்காது அவரது உடன்பிறவா அண்ணன் கவிஞர் அறிவுமதி என, பலர் எவிஞர் நா. முத்துக்குமார் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தியுள்ளனர். இனிய நண்பர் கவிஞர் பா. விஜய் எழுதியுள்ள நினைவஞ்சலி கவிதையை காணலாம்.

*சாதித்த நண்பா*

*உன் சடலத்தின் முன் தான்*

*தெய்வங்கள் எல்லாம்*

*தோற்றே போனது* 29

என்ற கவிதையின் வாயிலாக தன் துயரை வெளிப்படுத்தினார். 41 வருடங்களில் 100 வருடத்தின் உழைப்பை அவர் ஓய்வின்றி செய்தார்.கவிஞர் நா. முத்துக்குமார் இறுதி விடைக்குப் பின்னால் இருப்பது, அவர் எழுதிய படைப்புகளும் திரைப்பட பாடல்களும் ஆகும்.

**தொகுப்புரை**

தமிழ் மொழியை தம் பாடல் வழி சிறப்பித்த நா. முத்துக்குமார் அவர்களை, இத்தரணி உள்ள வரை தமிழ்த்திரை உலகம் போற்றும் என்பதில் ஐயமில்லை. உலகில் சாதித்த எந்த ஒரு படைப்பாளனும் தானாக உருவாகவில்லை சமுதாயம் அவனை உருவாக்குகிறது. இவ்வாறு உருவாகும் படைப்பாளன் தான் சார்ந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், சமுதாய நிலைகளை, துயரங்களை தன் படைப்பின் வழி

வெளிப்படுத்த பல படைப்புகளை படைக்கிறான். அவ்வாறு எளிய நடையில் எழுதி, 'மிகச்சிறந்த படைப்பாளராகிய ஒரு மாபெரும் கவிஞர் தான் நா. முத்துக்குமார்'.

**சான்றெண் குறிப்புகள்**

1.மு.வ(உ.ரை) திருக்குறள்,குறள்.211

2.நா.முத்துக்குமார்,வேடிக்கைப் பார்ப்பவன்,ப.19

3.மேலது.,ப.19.

4.மேலது.,ப.20.

5.நா.முத்துக்குமார்,படம்;7ஜி ரெயின்போ காலனி,திரை.பா.,அடி.6-12.

6.நா.முத்துக்குமார்,படம்;தங்கமீன்கள்,திரை.பா.,அடி.1-4.

7.மு.வ(உரை)திருக்குறள், குறள். 67.

8.நா.முத்துக்குமார்,பட்டாம்பூச்சி விற்பவன்,ப.114.

9.மூதுரைhttps://ta.quora.com.

10.நா.முத்துக்குமார்,வேடிக்கைப்பார்ப்பவன்,ப.70.

11.நா.முத்துக்குமார்,வேடிக்கைப் பார்ப்பவன்,ப.76.

12.மேலது.,ப.89.

13.மேலது.,ப.80.

14.பாரதியார் கவிதைகள்https://tamilandvedas.com

15.நா.முத்துக்குமார் ,வேடிக்கைப் பார்ப்பவன்,ப.122.

16.மேலது.,ப.124.

17.மேலது.,ப.175.

18.மேலது.,ப.179.

19.மேலது.,ப.180.

20.நா.முத்துக்குமார்,வேடிக்கைப் பார்ப்பவன்,ப.227.

21.மு.வ.(உ.ஆ.),திருக்குறள்,குறள்.70.

22.நா.முத்துக்குமார்,வேடிக்கைப் பார்ப்பவன்,ப.169.

23.மேலது.,ப.170.

24.மேலது.,ப.170.

25.மேலது.,ப.234.

26.மேலது.,ப.198.

27.மு.வ(உ.ஆ),திருக்குறள்,குறள்.595.

28.நா.முத்துக்குமார்,படம்;வீரநடை,திரை.பா.,அடி.1-22

29.ஆரூர் தமிழ்நாடன் ஆனந்த யாழ் .,பக்.65-66.